குடன் ஐந்தோ பத்தோ வந்திருந்தால் கூட, மாதத்தில் ஒரு நாளோ அல்லது தேவையானால் இரண்டு நாட்களோ கட்டாயம் கூடவேண்டும் என்று ஏதாவது நிலையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு புகாரும் இதுவரை வரவில்லை. இருப்பினும் அவர்கள் கூட்டாகததினால் அதைப் பரிசீலிக்கமுடியவில்லை என்ற நிலையில்லாமல் உடனுக்குடன் கூட்டி பரிசீலிக்கின்ற வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்தி தர இந்த அரசு நிச்சயம் முயற்சிக்கும்.

நகரப் பேரூராட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவித் தொகைகள்.

* 4002.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நிலக்கோட்டை, வத்தலக்குண்டு பேரூராட்சிகளை நகரப் பேரூராட்சிகள் என அறிவித்துள்ளதால், பேரூராட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவித் தொகைகள் இவைகளுக்குக் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்நிலையை மாற்றி, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தவும், மத்திய உதவிகள் கிடைக்கவும் வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நடப்பாண்டு முதல் தேசிய ஊரக கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஜவஹர் மற்றும் வேலை வாய்ப்புத் உறுதியளிப்புதிட்டம் என்ற புதிய திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.